**நந்தனார் சரித்திர நாட்டியம்**

விமரிசனம்- திருமதி சுமித்ரா ராம்ஜி

அறுபத்தி மூன்று நாயன்மார்களில் திருநாளைப் போவார் என்று புகழ்பெற்ற நந்தனார் சரித்திரம் நெஞ்சை நெகிழ வைப்பது. அச்சரித்திரத்தை ஏப்ரல் 25, 2009 அன்று நியூஜெர்ஸியில் சங்கம் திருவிழா மற்றும் கிளீவ்லேண்ட் ஆராதனை அமைப்பு ஆகியவை இணைந்து நிருத்தியமாக வழங்கினர். இந்தியாவிலிருந்து வந்திருந்த பலபிரபலமான இசைக் கலைஞர்களும் நியுஜெர்ஸியில் புகழ்பெற்ற திருமதி பாலாதேவியும் இணைந்து நிகழ்ச்சியை வழங்கினர்.

கோபாலகிருஷ்ண பாரதியாரின் பாடல்களைத் திருமதி சுகுணா வரதாச்சாரி, K.காயத்ரி திரு குன்னக்குடி பாலமுரளிகிருஷ்ணா ஆகியோர் பாட, பக்க பலமாக மாதிரிமங்கலம் சுவாமிநாதன் மிருதங்கமும், ல.தியாகராஜன் புல்லாங்குழலும், ரஞ்சனி அருண் வயலினும் ஜெயாசேகர் வீணையும் அருமையாக அமைந்திருந்தன. கூடவே மிருதங்கம் வாசித்த சிறுவன் பைரவ் சந்திரசேகருக்கு ஒரு சபாஷ்.



வணக்கம் ,காப்பு, காளிவிருத்தம் மற்றும் கணநாத சரணத்துடன் ஆரம்பித்த நிகழ்ச்சி கடைசிவரை அவையோரைக் கட்டிப்போட்டது. நந்தனாரின் பிறந்த ஊரான ஆதனூர் மக்களின் வெகுளித்தனத்தை மிக அருமையாகப் படம்பிடித்தார் திருமதி பாலாதேவி.. சிவலோக நாதனைக் கண்டு சேவித்திடுவோம் வாரீர் என்று தன் ஊர் மக்களைத் திருப்புன்கூருக்குச் செல்ல அழைக்கும் காட்சியில் ஆடுவது பாலாதேவி ஒருவர்தானா அல்ல பலபேர் ஒரேசமயத்தில் ஆடுகிறார்களா என்று வியக்கும் வண்ணம் மயக்கிவைத்தார். வருகலாமோ அய்யா என்று குழந்தைத்தனமாக நந்தன் கேட்கிற காட்சி உணர்ச்சிப்பட வைத்தது. திருப்புன்கூரில் நந்தனாரும் கிராமத்து மக்களும் கோயிலுக்குள் செல்ல அனுமதியின்றி எம்பி எம்பி ஆர்வத்தோடு இறைவனைப் பார்க்கத் துடித்ததை பாலா தேவி மிக அற்புதமாக ஆடிக் காட்டியதில் அவரது திறமையும் உழைப்பும் வெளிப்பட்டன. சற்றே விலகியிரும் பிள்ளாய் பாடலில் நந்தி

விலகுகிற காட்சியை இன்னும் கொஞ்சம் விஸ்தாரமாகச் செய்திருக்கலாம். அதேபோல் நந்தன் என்னும் ஜீவாத்மா பரமாத்மோவோடு கலக்கிற காட்சியை மிக அவசரமாகச் செய்தது சற்று ஏமாற்றமாக இருந்தது. இசைக் கலலஞர்களை மேடையின் நடுவே உட்காரவைத்திருந்தது நெருடலாக இருந்தது. கோபால கிருஷ்ண பாரதியாரின் பாடல் வரிகள் இசைக்கருவிகளின் அதீத ஆக்கிரமிப்பில் அடிபட்டுப்போயின. ஆனால் நிகச்சியைத் தொகுத்து வழங்கியவர் அந்தக் குறையைச் சீர் செய்தார்.

இருசொல்லலங்காரம், கட்கம், தெம்மாங்கு, ஆனந்தக்களிப்புப் போன்ற இசைவடிவங்கள் இரசிக்கும் வண்ணம் அளிக்கப்பட்டன. கலைஞர்கள் அனைவருக்கும் எங்கள் வாழ்த்துகள்!